**FIRST INFORMATION REPORT** | **TAMIL NADU POLICE**
**முதல் தகவல் அறிக்கை** | INTEGRATED INVESTIGATION FORM-I
~~(Under Section 154 Cr.P.C.)~~ u/s 173 BNSS
~~(குற்றவியல் நடைமுறைச் சட்டம் பிரிவு 154 இன் கீழ்)~~
C 8213037

1. District மாவட்டம்: கிருஷ்ணகிரி PS காவல்நிலையம்: ஊ.த.க.பிரிவு Year ஆண்டு: 2024 FIR No. மு.த.அ. எண்: 11/AC/2024 Date நாள்: 05.12.2024

2. (i) Act சட்டம்: ஊழல் தடுப்புச்சட்டம் 1988 Sections பிரிவுகள்: 7(a)
(ii) Act சட்டம்: திருத்தப்பட்டசட்டம் 2018 Sections பிரிவுகள்:
(iii) Act சட்டம்: Sections பிரிவுகள்:
(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் : —

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள் Date from நாள் முதல் 28.11.2024 Date to : நாள் வரை 05.12.2024
Time Period : நேர அளவு Time from : நேரம் முதல் — Time to : நேரம் வரை 13.30 மணி
(b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 05.12.2024 Time : நேரம் 20.30 மணி
(c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் — Time : நேரம் 21.30 மணி

4. Type of Information : Written/ Oral : தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக கணினியில் தட்டச்சு செய்யப்பட்டது

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும் சுமார் 90 கி.மீ. தென்மேற்கு
Beat Number : முறைக் காவல் எண் — (b) Address : முகவரி உதவி பொறியாளர் அலுவலகம், த.மி.உ.ப.கழகம், அஞ்செட்டி, கிருஷ்ணகிரி மாவட்டம்
(c) In case outside limit of this Police Station, then the Name of P.S : — District : —
இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையிட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் A. மோரிஸ் (b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர் அல்போன்ஸ்
(c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு 38 (d) Nationality : நாட்டினம் இந்தியன் (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண் —
Date of Issue : வழங்கப்பட்ட நாள் — Place of Issue : வழங்கப்பட்ட இடம் —
(f) Occupation : தொழில் விவசாயம் (g) Address : முகவரி 2/401, சேசுராஜபுரம், நாட்ராம்பாளையம் போஸ்ட், அஞ்செட்டி தாலுகா, கிருஷ்ணகிரி மாவட்டம்.

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
தெரிந்த / ஐயப்பாட்டிற்குரிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)
திரு. அலி, போர்மேன், உதவி பொறியாளர் அலுவலகம், தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம், அஞ்செட்டி.

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
குற்றமுறையிட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்
—

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary) ——
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

10. Total value of properties stolen / involved : ——
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு

11. Inquest Report / Un-natural death Case No. if any: ——
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால்

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

விவரம் தனித்தாள்களில் இணைக்கப்பட்டுள்ளது.

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ...................... Rank ...................... to take up the Investigation / Refused Investigation / transferred to PS..............................................on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ...................... பதவி ...................... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு .............................................. காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

A. Moies. 5-12-2024

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் / பெருவிரல் இரேகைப் பதிவு

05/12/24

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்

06.12.2024 at 07.00 hrs

Name: பெயர் S. பிரபு
Rank: நிலை ......................No. எண் .........

காவல் ஆய்வாளர்,
உ.த.க. பிரிவு,
திருவண்ணாமலை.

கிருஷ்ணகிரி ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு குற்ற எண். 11/AC/2024, u/s 7 (a) of the Prevention of Corruption Act, 1988 as amended by the PC amendment Act 2018 வழக்கின் முதல் தகவல் அறிக்கையின் காலம் 12-ன் தொடர்ச்சி.

இன்று 05.12.2024 ம் தேதி மாலை 20.30 மணிக்கு காவல் ஆய்வாளராகிய நான் நிலையத்தில் இருந்தபோது கிருஷ்ணகிரி மாவட்டம், அஞ்செட்டி வட்டம், நாட்ராம்பாளையம் அஞ்சல், சேசுராஜபுரத்தை சேர்ந்த திரு.அல்போன்ஸ் மகன் திரு.A.மோயிஸ் என்பவர் கிருஷ்ணகிரி ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு அலுவலகத்தில் நேரில் ஆஜராகி அளித்த கணினி மூலம் தட்டச்சு செய்யப்பட்ட புகாரின் விவரம் பின்வருமாறு. அனுப்புநர், A.மோயிஸ், த/பெ.அல்போன்ஸ் கதவு எண் 2/401, சேசுராஜபுரம், நாட்ராம்பாளையம் போஸ்ட், அஞ்செட்டி தாலுகா, கிருஷ்ணகிரி மாவட்டம். பெறுநர், காவல் ஆய்வாளர், லஞ்ச ஒழிப்புத்துறை, கிருஷ்ணகிரி, அய்யா, நான் அஞ்செட்டி தாலுகா, சேசுராஜபுரம் கிராமத்தில் குடும்பத்துடன் குடியிருந்து வருகிறேன். எனக்கு கல்யாணமாகி மனைவி மற்றும் இரண்டு பையன்கள் இருக்கின்றனர். நான் எனது அப்பா வழியில் பாத்தியப்பட்ட பூர்வீக சொத்தில் எனது பாகமான சுமார் 63 சென்ட் நிலத்தில் விவசாயம் செய்து கொண்டும் 5 விசைத்தறிகள் வைத்து புடவை நெய்யும் தொழில் செய்தும் வருகிறேன். எனது நிலத்தில் சுமார் 20 சென்ட் பரப்பில் கனகாம்பரம் பூச்செடி பயிரிட்டுள்ளேன். எனது நிலத்தில் சுமார் இரண்டு வருடத்திற்கு முன்பாக போடப்பட்ட போர்வெல்லுக்கு மின் இணைப்பு வாங்கி பூச்செடிகளுக்கு தண்ணீர் பாய்ச்சுவதற்காக போன ஜூன் மாதத்தில் ஒரு நாள் அஞ்செட்டி EB ஆபிசுக்கு போனேன் அங்கு தற்காலிகமாக வேலை செய்யும் வினோத் என்பவரை பார்த்தேன் அவர் புதிய பூந்தோட்ட சர்வீஸ் வாங்குவதற்கு அப்ளிக்கேசன் போட்டு அரசுக்கு பீஸ் கட்ட வேண்டும் என்று சொல்லி பணம் ரூ.21,000/- மற்றும் எனது நிலத்தின் சிட்டா, அடங்கல், ஆதார் அட்டை ஆகியவற்றின் நகல்கள் மற்றும் இரண்டு பாஸ்போர்ட் சைஸ் போட்டோ ஆகியவற்றை பெற்றுக்கொண்டு என்னை அனுப்பிவிட்டார். பிறகு சுமார் இரண்டு மாதம் கழித்து எங்கள் ஊர்க்காரரிடம் மின் கட்டணம் செலுத்தியதற்கான ரசீது ஒன்றை கொடுத்து அனுப்பினார். அதன்

பிறகு போன மாதத்தில் ஒருநாள் எங்கள் ஊருக்கு வினோத் வந்தபோது என்னிடம் எனது போர்வெல்லுக்கு சர்வீஸ் சீக்கிரம் கிடைக்க வேண்டுமென்றால் போர்மேனை வந்து பார்க்குமாறு சொன்னார். நான் வேலையாக இருந்ததால் அஞ்செட்டி EB ஆபிசுக்கு போகமுடியவில்லை. போன வாரம் வியாழக்கிழமை 28.11.2024-ம் தேதி இது சம்மந்தமாக போர்மேனை பார்ப்பதற்க்கு அஞ்செட்டி EB ஆபிசுக்கு போனேன். அங்கு இருந்த போர்மேன் அலி என்பவரை பார்த்து, எனது போர்வெல்லுக்கு சீக்கிரம் சர்வீஸ் மற்றும் மீட்டர் கொடுக்குமாறு கேட்டேன். அவர் அதற்கு ரூ.25,000/- செலவாகும் என்று சொன்னார். அதற்கு நான் ஏற்கனவே அரசுக்கு கட்ட வேண்டிய பீஸ் எல்லாம் கட்டிவிட்டேன் என்று சொன்னேன். அவர் தனக்கு தனியாக இந்த பணம் கொடுத்தால்தான் சீக்கிரம் மீட்டர் மற்றும் சர்வீஸ் கொடுக்க முடியும் என்று சொன்னார். அதற்கு நான் என்னிடம் அவ்வளவு பணம் இல்லை என்று சொன்னேன். அவர் நிறைய செலவு இருக்கு அதனால் ரூ.15,000/- பணமாவது கொடுத்தாக வேண்டும் என்று என்னிடம் சொன்னார். எனவே நான் அவரிடம் எதுவும் சொல்லாமல் அங்கிருந்து திரும்பி வந்து விட்டேன். பிறகு நேற்று 04.12.2024-ம் தேதி வினோத் என்னை செல்போனில் கூப்பிட்டு போர்மேன் உங்களை ஆபிசுக்கு வந்து பார்க்குமாறு சொல்கிறார் என்று என்னிடம் சொன்னார். நான் எனக்கு வேலை இருப்பதால் நாளைக்கு வருகிறேன் என்று அவரிடம் சொல்லி விட்டு, இன்று 05.12.2024-ம் தேதி மதியம் சுமார் 01.30 மணிக்கு அஞ்செட்டி EB ஆபிசுக்கு போய் போர்மேன் அலி அவர்களை பார்த்தேன் அப்போது பணம் ரூ.15,000/- கொண்டு வந்தீர்களா என்று அவர் என்னிடம் கேட்டார். அதற்கு நான் அவ்வளவு பணம் ரெடி பண்ண முடியவில்லை கொஞ்சம் குறைச்சுக்கோங்க என்று கேட்டேன். அதற்கு அவர் ரூ.10,000/-மாவது தனக்கு தனியாக பணம் கொடுத்தால் தான் உங்களுக்கு சர்வீஸ் கொடுக்கமுடியும் என்று கறாராக சொல்லிவிட்டார். நானும் பணம் ரெடி பண்ணிட்டு வர்றேன் சார் என்று சொல்லிவிட்டு அங்கிருந்து வந்துவிட்டேன். அஞ்செட்டி EB ஆபிஸ் போர்மேன் அலி என்பவருக்கு லஞ்சமாக பணம் ரூ.10,000/- கொடுத்து EB சர்வீஸ் வாங்க எனக்கு விருப்பமில்லை, எனவே

என்னிடம் லஞ்சமாக பணம் ரு.10,000/- கேட்ட போர்மேன் அலி என்பவர் மீது சட்டப்படி நடவடிக்கை எடுக்குமாறு தங்களை கேட்டுக்கொள்கிறேன். இப்படிக்கு (ஒப்பம்) A.மோயிஸ், 5.12.2024.

Sir, received this computer typed complaint on 05.12.2024 at 20.30 hrs and made a quick verification on the general reputation of the accused Tr.Ali and learnt to be not good. The motive and antecedents of the complainant have been checked carefully and found nothing adverse. Therefore, a case in Krishnagiri V&AC Cr.No.11/AC/2024 u/s 7 (a) of the Prevention of Corruption Act, 1988 as amended by the PC Amendment Act, 2018 was registered today on 05.12.2024 at 21.30 hrs against the accused Tr.Ali, Foreman. The original FIR along with this complaint was sent to the Hon'ble Court of Special Judge cum Chief Judicial Magistrate, Krishnagiri and remaining copies were sent to the officers concerned.

05/12/2024

காவல் ஆய்வாளர்
ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு,
கிருஷ்ணகிரி